**பிப்ரவரி – 16**

# TNPSC துளிகள்

- மத்திய அமைச்சரவையானது சமீபத்தில் கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் கிளை அமர்வை ஜல்பைகுறியில் அமைத்திட ஒப்புதலளித்திருக்கின்றது.
  - முன்மொழியப்பட்டுள்ள இந்த கிளை அமர்வு டார்ஜிலிங், கலிம்போங், ஜல்பைகுறி மற்றும் கூச் பிகார் ஆகிய நான்கு மாவட்டங்கள் மீது தனது அதிகார வரம்பெல்லையைக் கொண்டிருக்கும்.
- மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் (Central Board of Direct Taxes) தலைவரான சுசில் சந்திரா புதிய தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
  - இந்த நியமனம் இவ்வருடம் வரவிருகின்ற பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- பிப்ரவரி 14-ம் தேதியன்று ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் நிகழ்த்தப்பட்ட கொடூர தீவிரவாதத் தாக்குதலுக்கு ஒரு நாள் கழித்து இந்தியா பாகிஸ்தானிற்கு அளித்திருந்த "மிகவும் வேண்டப்பட்ட நாடு" என்ற தகுதியை ரத்து செய்திருக்கின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## 2 புதிய மாநகராட்சிகள் – தமிழ்நாடு

- தமிழ்நாடு மாநில அரசு ஒசூர் மற்றும் நாகர்கோயில் நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான மசோதாவை நிறைவேற்றி இருக்கின்றது.
- இதற்கான ஒரு மசோதா பிப்ரவரி 14-ம் தேதியன்று அறிமுகப்படுத்தப்பட்டு சட்டப் பேரவையில் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.
- இவ்விரண்டு நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதன் மூலம், தமிழ்நாடு மொத்தமாக 14 மாநகராட்சிகளைக் கொண்டிருக்கும்.

## விவசாய உற்பத்தி மற்றும் கால்நடைகளுக்கான கொள்கை கட்டமைப்பு

- தமிழ்நாடு விவசாய உற்பத்தி மற்றும் கால்நடைகளுக்கான ஒப்பந்த விவசாய மற்றும் சேவைகள் மசோதா (ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்) 2019 சட்டப்பேரவையில் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.
- இது தமிழ்நாடு ஒப்பந்த விவசாய மற்றும் சேவை (ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்) ஆணையத்தை (TN Contract Farming and Services (Promotion and Facilitation) Authority) ஏற்படுத்திட எண்ணுகின்றது.
- இந்த ஆணையம் ஒப்பந்த விவசாயத்தை மிகுந்த வெளிப்படையாகவும் எளிதாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்ள உதவுவதோடு சில குறிப்பிட்ட பகுதிகளில் உரிமையியல் நீதிமன்றத்திற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.
- இம்மசோதாவை ஏற்றுக் கொள்வதற்கான நோக்கம் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மாதிரி சட்ட மசோதாவின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## மைதிலி மொழியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் மைதிலி மொழியையும் அதன் எழுத்து வடிவத்தையும் மேம்படுத்திப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவின் பரிந்துரைகளில் சிலவற்றை ஏற்றுக்கொண்டது.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகள் பின்வருமாறு:
  - பீகாரின் தர்பாங்காவில் காமேஸ்வர் சிங் சமஸ்கிருத பல்கலைக்கழகம் அல்லது லலித் நாராயண் மிதிலாப் பல்கலைக்கழகம் ஆகிய ஏதேனும் ஒன்றில் கையெழுத்து மற்றும் எழுத்து மையத்தை ஏற்படுத்துதல்.
  - இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்ப வளர்ச்சித் துறையில் மேம்படுத்தப்பட்ட மிதிலாக்சார் என்பதன் யுனிகோடு (கணினி எழுத்து) எழுத்து வடிவங்கள் தொடர்பான பணிகளை விரைவாக நிறைவு செய்தல்.
  - மிதிலாக்சார் எழுத்து வடிவங்களைக் கற்பிப்பதற்கான கேட்பொலிக் காட்சிப் பொருட்களைத் தயார் செய்தல்.

### *மைதிலி மொழி மற்றும் எழுத்து வடிவம்*

- இந்தியத் துணைக் கண்டத்தின் பூர்வீகமான மொழியான மைதிலி ஒரு இந்தோ ஆரிய மொழி வகையைச் சார்ந்தததாகும். இது பெரும்பாலும் இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் பேசப்படுகின்றது.
- இது பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் பேசப்படுகின்றது. மேலும் இது 8-வது பட்டியலில் அங்கீகரிக்கப்பட்ட 22 இந்திய மொழிகளில் ஒன்றாகும்.
- மிதிலாக்சார் அல்லது தீர்ஹுதா என்பது பரந்த மிதிலா மொழிக் கலாச்சாரத்தின் எழுத்து வடிவம் ஆகும்.
- இது ஒரு மிகவும் பழமையான எழுத்து வடிவம் ஆகும். மேலும் இது பரந்து விரிந்த வடகிழக்கு இந்தியாவின் எழுத்து வடிவங்களில் ஒன்றாகும்.
- மிதிலாக்சார், பங்களா, அசாமிஸ், நேவாரி, ஒடியா மற்றும் திபெத்தியன் ஆகியன அம்மொழிக் குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆகும்.

## தேசிய எரிவாயு விநியோகக் கட்டமைப்பு

- தேசிய எரிவாயு விநியோகக் கட்டமைப்பை ஏற்படுத்திட மத்திய அரசு திட்டமிட்டிருக்கின்றது.
- 2006 ஆம் ஆண்டு, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை மன்றச் சட்டத்தின் கீழ், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (Petroleum and Natural Gas Regulatory Board - PNGRB) ஒரு ஆணையமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.
- இது பிராந்தியப் பகுதிகளில் நகர எரிவாயு விநியோகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக நிறுவனங்களுக்கு அனுமதியளிப்பு அங்கீகாரத்தை வழங்கும்.
- தேசிய வரிவாயு விநியோகக் கட்டமைப்பின் நோக்கங்கள் பின்வருமாறு

- இயற்கை எரிவாயுவை அணுகுவதில் நாட்டிற்குள் இருக்கும் பிராந்திய ஏற்றத் தாழ்வுகளை களைவது மற்றும் நாடு முழுவதும் சுத்தமான மற்றும் பசுமையான எரிபொருளை வழங்குவது.
- எரிபொருள் தேவைப்படும் இடங்களை எரிவாயுவின் மூல இடங்களுடன் இணைப்பது மற்றும் பலதரப்பட்ட துறைகளில் உள்ள நுகர்வோர்களுக்கு எரிவாயு கிடைப்பதை உறுதி செய்வது.
- அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் குழாய் மூலம் இயற்கை எரிவாயு ஆகியவற்றின் விநியோகத்திற்காக பல்வேறு நகரங்களில் நகர எரிவாயு விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்துவது.


## லாஆசியா மனித உரிமைகள் மாநாடு 2019

- முதலாவது லாஆசியா மனித உரிமைகள் மாநாடு புதுதில்லியில் இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்துடன் இணைந்து லாஆசியா அமைப்பால் நடத்தப்பட்டது.
- இம்மாநாடு அனைத்து நபர்களுக்கும் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புகளின் மீது அனுபவத்தையும் உள்ளார்ந்த அறிவையும் பகிர்ந்து கொள்ள வழங்கறிஞர்களுக்கும் சட்டத் தொழிலோடுத் தொடர்புடைய தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் ஒரு புதுமையான வாய்ப்பினை வழங்கிட எண்ணுகின்றது.
- 2019 ஆம் ஆண்டிற்கான லாஆசியா மனித உரிமைகள் மாநாட்டின் கருத்துரு, "அரச அதிகாரம், வணிகம் மற்றும் மனித உரிமைகள் – தற்காலத்தைய சவால்கள்" என்பதாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## குடும்பத்திற்கு நிதி உதவி

- ஹங்கேரி அரசு அதிகக் குழந்தைகளுடன் கூடிய குடும்பங்களுக்கு மிகப் பெருமளவில் நிதி உதவிகளையும் மானியங்களையும் உயர்த்தியிருக்கின்றது.
- இந்த அறிவிப்பு பெண்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காகவும் குறைந்துக் கொண்டு வரும் ஹங்கேரியின் மக்கள்தொகையை அதிகப்படுத்துவதற்காகவும் வேண்டி அறிவிக்கப்பட்டது.
- நிதிச் சலுகைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது
  - குறைந்தது 4 குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் பெண்களுக்கு வாழ்நாள் முழுவதுமான தனிநபர் வருமானவரி விலக்கு.
  - மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு ஏழு இருக்கை கொண்ட வாகனத்தை வாங்குவதற்காக 8825 டாலர்கள் மானிய உதவி.
  - முதல்முறையாக 40 வயதிற்கு உள்ளாக திருமணம் செய்யும் பெண்களுக்கு 35300 டாலர்களுக்கு குறைந்த வட்டியிலான கடன்.




# பொருளாதாரச் செய்திகள்

## பிணையற்ற விவசாயக் கடன் வரம்பு

- சிறு குறு விவசாயிகளுக்கு உதவி செய்திடும் நோக்கில் பிணையற்ற விவசாயக் கடன்களுக்கான வரம்பை இந்திய ரிசர்வ் வங்கி தற்போதைய 1 லட்சம் என்பதிலிருந்து 1.6 லட்சத்திற்கு உயர்த்தியிருக்கின்றது.
- மேலும் விவசாயக் கடனை மறு ஆய்வு செய்யவும் சாதகமான கொள்கை முடிவுகளை ஏற்படுத்திடவும் ஒரு உள்ளக செயற்குழுவை அமைத்திடவும் முடிவெடுத்திருக்கின்றது.
- இந்த ஒரு லட்ச ரூபாய் வரம்பு 2010 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.
- அதற்குப் பிறகிலிருந்து ஏற்பட்ட விவசாய இடுபொருட்களின் விலை ஏற்றத்தையும் ஒட்டு மொத்தப் பணவீக்கத்தையும் கருத்தில் கொண்டு பிணையற்ற விவசாயக் கடன்களின் வரம்பை அதிகரிப்பது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது.
- இது முறையான கடன் வழங்கு முறையில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் பயனாளிகளின் அளவை உயர்த்தும்.

# மாநிலச் செய்திகள்

## ஸ்மைல் V - நடவடிக்கை

- இவ்வருடம் ஜனவரி 01-ம் தேதி முதல் ஹைதராபாத் காவல் துறையால்

மேற்கொள்ளப்பட்ட ஸ்மைல் V நடவடிக்கை தெருக்களில் தொழிலாளர்களாகவோ அல்லது பிச்சைக்காரர்களாகவோ இருந்த 325 குழந்தைகளை மீட்பதில் உதவி புரிந்து இருக்கின்றது.

- முஸ்கான் நடவடிக்கை எனவும் அறியப்படும் ஸ்மைல் நடவடிக்கை காணாமல் போன குழந்தைகளை மீட்டு மறுவாழ்வு அளித்திடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மத்திய உள்துறை அமைச்சகத்தின் நடவடிக்கை ஆகும்.
- இது ஜனவரி 01-ம் தேதியன்று தெலுங்கானா மாநிலம் முழுவதும் ஆரம்பிக்கப்பட்டது.

## சாரதி சந்தேஷ் வாகினி வாகனங்கள்

- உத்தரப் பிரதேச முதல்வர் 33 சாரதி சந்தேஷ் வாகினி வாகனங்களை கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
- இது ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பிடும் எண்ணத்துடன் மாநில குடும்ப நலத் துறையால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.
- இந்த வாகனங்கள், பலதரப்பட்ட ஆவணப் படங்கள் மற்றும் திரைப்படங்கள் மூலம் பார்வையாளர்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தகவல்களை அளிக்கும்.
- மாநில சுகாதாரத்துறை இப்பரப்புரையை மேற்பார்வை செய்திடவும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, அனைவருக்கும் கல்வி உள்ளிட்ட மாநில சுகாதாரத் துறையால் நிர்ணயிக்கப்பட்ட பல இலக்குகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனவா என்பதை உறுதி செய்யவும் கண்காணிப்பு அதிகாரிகளை நியமிக்கும்.



# முக்கிய தினங்கள்

## தேசிய யுனானி தினம் – பிப்ரவரி 11

- இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 11-ம் தேதி தேசிய யுனானி தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- ஒரு தலைசிறந்த இந்திய யுனானி மருத்துவராக அவர் அளித்த பங்களிப்புகளுக்கு ஒரு அங்கீகாரமாக ஹாகிம் அஜ்மல் கானின் பிறந்த தினமான பிப்ரவரி 11-ம் தேதி, மத்திய ஆயுஷ் அமைச்சகத்தால் (Ministry of AYUSH) யுனானி தினமாக 2016 ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் யுனானி தினத்தை நினைவில் வைத்திட பொது சுகாதாரத்திற்கான யுனானி மருத்துவத்தின் மீது தேசிய மாநாடு என்ற இரண்டு நாள் அமர்வு புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- மத்திய ஆயுஷ் அமைச்சகம் யுனானி மருத்துவத்திற்கான ஆயுஷ் விருதுகள் என்ற திட்டத்தையும் ஏற்படுத்தியது. இத்திட்டம் ஒவ்வொரு வருடத்திலும் 12 விருதுகளை பின்வரும் பிரிவுகளில் அளித்திடுவதற்கான விதிகளைக் கொண்டிருக்கின்றது.
    - சிறந்த ஆராய்ச்சியாளர் அறிக்கை விருது
    - இளம் அறிவியலாளர் விருது
    - சிறந்த ஆசிரியர் விருது
    - வாழ்நாள் சாதனை விருது




- - - - - - - - - - - - - -